3rd March 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : The Payment of Wages Act, 1936 applies to the following industries in this State :

1. Factories covered by sections 2 (n) and 85 of the Factories Act, 1948.

2. Tramway or Motor bus Services.

3 Plantations.

4. Mines, other than coal mines.

SRI N. K. PALANISAMI : ஸார், பாக்கியிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கும் இந்த சட்டத்தை விஸ்தரிக்க சர்க்கார் ஏதாவது ஆலோசனை செய்திருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதுதான் சர்க்காரின் நோக்கம். படிப்படியாக விஸ்தரிக்கப்படும்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN: ஸார், நிலங்களில் வேலை செய்யும் விவசாயக்கூலிகள் (அதாவது அத்தக்கூலிகள்) விவசாயத்தில் வேலை செய்யும் தினக் கூலிகளுக்கு கூலி நிர்ணயம் செய்வதற்கு ஒரு சட்டம் கொண்டு வர பரிசிலனைக்கு உடையதாகத்தெரிகிறது. அதை சீக்கிரமாக கொண்டு வருவதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சி எடுத்து விவசாயிக் கூலிகட்கு சீக்கிரம் சட்டம் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : குறைந்த பட்சக்கூலி நிர்ணயம் விவசாயத் தொழிலாளர்களுக்கும் 1959-ம் ஆண்டு டிஸம்பர் மாதத்தில் கொண்டுவரப்படும்.

SRI A. GOV NDASAMY : தலைவர் அவர்களே, பனியன உற்பத்தி செய்யும் தொழிலாளர்களுக்கும் ஒரே விதமான சம்பளம் கொடுக்கப்படுவதற்கு ஒரு சட்டம் கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கெல்லாம் தனித்தனியாகச் சட்டம் தேவையில்லை. குறைந்த பட்சக் கூலி நிர்ணயத்தின் அடிப்படையில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

Disputes concerning the catering establishments

* 529 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of disputes that arose in the catering establishments in (i) the State and (ii) the City after the Catering Establishments Act, 1958, has come into force?

THE HON. SRI R. VENKATARAMAN : The Madras Catering Establishments Act, 1958, has not yet been brought into force as the rules have not been finalised. Hence the question does not arise.

Madras Shops and Establishments Act

* 530 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government had issued any notification exempting temporarily for one year with effect from 1958 all establishments from the provisions of Chapters II to VI and section 31 of Chapter VII of the Madras Shops and Establishments Act, 1947 (Madras Act XXXVI of 1947);

(b) whether visit books are kept in all these establishments as required under the notification;

(c) whether the notification was reviewed later on; and

(d) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Exemption has been granted for a period of one year from 26th March 1958 to all shops and establishments employing three and less than three persons subject to certain conditions.

(b) Visit books are kept in almost all shops and establishments.

(c) & (d) The exemption which was granted originally in 1954 and renewed from year to year was reviewed in 1957 and the Government considered that there was a case for continuing the exemption with suitable revised conditions for a further period of one year.

SRI M. KALYANASUNDARAM : இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் விதி விலக்கில் என்னென்ன மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI R. VENKATARAMAN : ரூல் 16–ன் கீழ் ரெஜிஸ்டர் வைத்துக்கொள்ள வேண்டும், சம்பள பட்டியல் ரெஜிஸ்டர் வைத்துக் கொள்ளவேண்டும், விஸிட்ஸ் புக் வைத்துக்கொள்ள வேண்டும். வாராந்தர விடுமுறை அளிக்கப்படவேண்டும் என்றெல்லாம் நாம் விதிகள் நிர்ணயித்திருக்கிறோம்.

SRI S. PAKKIRISAMI PILLAI : எண்ணிக்கையில் மூன்று தொழிலாளர்களுக்கு குறைவாக இருந்தால் இந்த ஷாப் ஆக்ட் பொருந்தாது என்று சொல்லப்படுகிறது. இதை அனுசரணையாக வைத்துக்கொண்டு சிலர் தங்களுடைய தொழில் ஸ்தாபனங்களில் முதலாளிகளுடைய சார்பில் தங்கள் உறவினர்களை வைத்துக்கொண்டிருப்பதாக காண்பித்து இந்த சட்டத்திலிருந்து தப்பித்துவிடுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : அவ்வாறு சொல்லப்படுவது உண்மையா இல்லையா என்று பரிசீலனை செய்து பார்த்து அதன் பேரில்தான் நடவடிக்கை எடுக்க முடியும். அப்படியில்லை என்று கண்டால் இந்தச்சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.

SRI N. K. PALANISAMI : இந்த நோட்டிபிகேஷன் பிரகாரம் பல தொழிற்சாலைகளிலும் விஸிட்ஸ் புக் வைக்கப்பட வில்லை என்று அரசாங்கத்திற்கு புகார்கள் வந்திருக்கின்றனவா, இதன் மூலம் தொழிலாளர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகிறது என்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்காருக்கு எந்தெந்த இடங்களில் எல்லாம் இது அனுசரிக்கப்படவில்லை என்று தெரியாது. யாராவது புகார் செய்தால் சர்க்காருக்குத் தெரியும். அவ்விதம் தெரிகின்ற சமயத்தில் அது சம்பந்தமான இடங்களில் பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும். இதில் முக்கியமாக தொழிற் சங்கங்கள் தான் பொறுப்பு எடுத்து இதைப்பற்றி சரியான விபரங்களை சர்ககாருக்கு அந்தந்த சமயங்களில் கொடுக்க வேண்டும்.